## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 3-7 - கள்வன் கொல்
## (திருவாலி 3)

1208 * கள்வன் கொல்? யான் அறியேன் * கரியான் ஒரு காளை வந்து *
வள்ளி மருங்குல் * என்தன் மடமானினைப் போதவென்று **
வெள்ளி வளைக் கைப் பற்றப் * பெற்ற தாயரை இட்டகன்று[1] *
அள்ளலம் பூங்கழனி * அணியாலி புகுவர் கொலோ? 1

1209 பண்டு இவன் ஆயன் நங்காய்! * படிறன் புகுந்து * என் மகள் தன்
தொண்டையஞ் செங்கனிவாய் * நுகர்ந்தானை உகந்து ** அவன் பின்
கெண்டை ஒண் கண் மிளிரக் * கிளி போல் மிழற்றி நடந்து *
வண்டமர் கானல் மல்கும் * வயலாலி புகுவர் கொலோ? 2

1210 அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய்! * அரக்கர் குலப் பாவை தன்னை *
வெஞ்சின மூக்கரிந்த * விறலோன் திறம் கேட்கில் ** மெய்யே
பஞ்சிய மெல்லடி * எம் பணைத் தோளி பரக்கழிந்து *
வஞ்சியன் தண்பணை சூழ் * வயலாலி புகுவர் கொலோ? 3

1211 ஏது அவன் தொல் பிறப்பு? * இளையவன் வளையூதி * மன்னர்
தூதுவனாய் அவனூர் * சொலுவீர்கள்! சொலீர் அறியேன் **
மாதவன் தன் துணையா நடந்தாள் * தடம் சூழ் புறவில் *
போது வண்டாடு செம்மல் * புனலாலி புகுவர் கொலோ? 4

1212 தாய் எனை என்று இரங்காள் * தடந்தோளி தனக்கு அமைந்த *
மாயனை மாதவனை * மதித்து என்னை அகன்ற இவள்[2] **
வேயன தோள் விசிறிப் * பெடை அன்னமென நடந்து *
போயின பூங்கொடியாள் * புனலாலி புகுவர் கொலோ? 5

1213 * என்துணை என்று எடுத்தேற்கு * இறையேனும் இரங்கிற்றிலள் *
தன்துணையாய என்தன் * தனிமைக்கும் இரங்கிற்றிலள் **
வன்துணை வானவர்க்காய் * வரம் செற்று அரங்கத்து உறையும் *
இன்துணைவன்னொடும் போய் * எழிலாலி புகுவர் கொலோ? 6

1214 அன்னையும் அத்தனும் என்று * அடியோமுக்கு இரங்கிற்றிலள் *
பின்னை தன் காதலன் தன் * பெருந்தோள் நலம் பேணினளால் **
மின்னையும் வஞ்சியையும் * வென்று இலங்கும் இடையாள் நடந்து *
புன்னையும் அன்னமும் சூழ் * புனலாலி புகுவர் கொலோ? 7

---
[1] விட்டகன்று
[2] அகன்றவன் பின்

1215 முற்றிலும் பைங்கிளியும் * பந்தும் ஊசலும் பேசுகின்ற *
சிற்றில்மென் பூவையும் * விட்டகன்ற செழுங்கோதை தன்னைப் **
பெற்றிலேன் முற்றிழையை * பிறப்பிலி பின்னே நடந்து *
மற்றெல்லாம் கை தொழப் போய் * வயலாலி புகுவர் கொலோ? 8

1216 காவியங்கண்ணி எண்ணில் * கடிமாமலர்ப் பாவை ஒப்பாள் *
பாவியேன் பெற்றமையால் * பணைத் தோளி பரக்கழிந்து **
தூவிசேர் அன்னம் அன்ன நடையாள் * நெடுமாலொடும் போய் *
வாவியந்தண் பணை சூழ் * வயலாலி புகுவர் கொலோ? 9

1217 * தாய் மனம் நின்றிரங்கத் * தனியே நெடுமால் துணையா *
போயின பூங்கொடியாள் * புனலாலி புகுவர் என்று **
காய்சின வேல் கலியன் * ஒலி செய் தமிழ் மாலை பத்தும் *
மேவிய நெஞ்சுடையார் * தஞ்சமாவது விண்ணுலகே 10

**அடிவரவு:** கள்வன் பண்டு அஞ்சுவன் ஏதவன் தாய் என்துணை அன்னையும்
முற்றிலும் காவி தாய்மனம் நந்தா